167—

வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பழுதடைந்த கட்டிடத்தைக் கட்டுதல்

***9385**— திரு.ஆர். ஈஸ்வரன் :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்டிடங்களும் பழுதடைந்து மோசமான நிலைமையில் இருக்கின்ற காரணத்தால், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழுது பார்க்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ள கட்டிடங்களைத் திரும்பக் கட்டவும், மற்ற கட்டிடங்களை சீரமைக்கவும், ரூ. 21.00 இலட்சம் தேவைப்படும். கட்டிடங்களின் பராமரிப்புக்கு அளிக்கப்படும் வருடாந்திர மானியத்திலிருந்து இப்பணிகளைச் செய்ய இயலாது. இதற்கென அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யும் தருணத்தில் இப்பணிகளை எடுத்துச் செய்ய இயலும்.

168—

ராதாபுரம் தொகுதியில் வீட்டு வசதி வாரிய வீடுகள் கட்டுதல்

***13808**—திருமதி ரமணி நல்லதம்பி :*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம் தொகுதி, கோட்டைக்கருங்குளம் அருகில் வீட்டு வசதித்துறை மூலம் இருபது வீடுகள் கட்டி முடிக்கப்படாத நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைக் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 மார்ச் 30]

(அ) ஆம், 18 வீடுகள் உள்ளன.

(ஆ) இராதாபுரம் கிராமத்தில் கிராமப்புற வீட்டு வசதி சங்கத்தின் மூலம் 18 ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்ட வட்டியில்லாக் கடனாக ரூ.2000, அரசு மான்யம் ரூ.1000/- கொடுத்து இதில் சொந்தமாக ரூ.2000/- செலுத்தி பயனீட்டாளர்கள் தங்களுடைய சொந்த ஏற்பாட்டில் வீடு கட்ட வேண்டுமென அறிவிக்கப்பட்டது. இதில் 16 உறுப்பினர்களால் நிலைமட்டம் வரையும், 2 உறுப்பினர்களால் அடி மட்டம் வரையும் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் தலா ரூ.1500/- கடன் வழங்க தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் முன் வந்தபோது பயனீட்டாளர்கள் முன்வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை மீண்டும் எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த................ (குறுக்கீடு)

திரு.ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி பற்றிப் பேச வாய்ப்புக் கேட்டிருந்தேன்.......... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்டதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பேச இருக்கின்றார்கள். நீங்களும் பேச இருக்கிறீர்கள், தம்புசாமியும் பேசவேண்டும். ஓர் உறுப்பினர்தான் எல்லாம் பேசவேண்டுமென்று நினைக்கக்கூடாது. நீங்களும், பரிதி இளம்வழுதியும் இரண்டு பேருமாகச் சேர்ந்துதான் கொடுத்திருக்கிறீர்கள். அதை அவர் பேசலாமே, உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு வேண்டாம். (குறுக்கீடு) நான் மறுப்புக் கொடுத்தால் கொடுத்ததுதான். அதை நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடு) அதையெல்லாம் நீங்கள் பேசுகிறபோது பேச வேண்டும். நீங்கள் தொகுதியில் நடக்கிற பிரச்சினைகளை எல்லாம் பேசுவதற்காகத்தான் உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கிறோம். எல்லா வகையான பிரச்சினைகளையும் இங்கே வந்து 'ஜீரோ ஹவரில்' கிளப்ப முடியாது. உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறபோதே நீங்கள் அதைப் பயன்படுத்திப் பேச வேண்டும். நான்